# கொரோனா வைரஸ் (COVID-19) பேரிடர் கால நிவாரண உதவி திட்டம்

# உங்கள் விண்ணப்பத்தை எப்படி  சமர்ப்பிப்பது

இந்தப் பக்கம் பாரசீகம், நேபாளம், தமிழ் மற்றும் உருது ஆகிய மொழிகளிலும் கிடைக்கிறது.

## அவசரகால நிவாரண உதவி திட்டம் பற்றி ஒரு அறிமுகம்

அவசரகால நிவாரண உதவி என்பது உணவு, மருந்து அல்லது தங்குமிடம் போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி  செய்ய உதவுவதே ஆகும்.

காமன்வெல்த் வருமான உதவி (Jobseeker மற்றும் Job Keeper உட்பட) அல்லது விக்டோரியன் அரசின் சர்வதேச மாணவர் அவசரகால  நிதி உதவிக்கான அணுகல் இல்லாதவர்களுக்கு ஆதரவளிக்க ஆஸ்திரேலிய Red Cross ஆனது  விக்டோரியன் அரசின் நிதியுதவியைப்  பெற்றுள்ளது.

இந்த ஆதரவானது மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கும் தற்காலிக விசா வைத்திருப்பவர்கள் மற்றும் ஆவணமற்ற புலம்பெயர்ந்தோரை இலக்காகக் கொண்டுள்ளது. தனிப்பட்ட தேவையைப் பொறுத்து, அடுத்த ஆறுமாத காலத்தில் ஒரு நபர் அல்லது குடும்பத்திற்கு அதிகபட்சமாக மூன்று சிறிய அவசரகால நிவாரணத் தொகைகள்  வழங்கப்படலாம்.

## உங்கள் விண்ணப்பத்தை  நிரப்பும்  முன்பு

உங்கள் விண்ணப்பத்தை விண்ணப்பிக்கும் முன்பு, அவசரகால நிவாரண உதவி  இணையதளத்தில் தகுதி வரம்புகளைப் பற்றி அறிந்து கொள்ளவும்.

## எவ்வாறு  விண்ணப்பிப்பது?

இந்த ஆவணம் உங்கள் விண்ணப்பத்தை அவசரகால நிவாரண உதவி இணையதளம் வழியாகச் சமர்ப்பிப்பதற்கான படிப்படியான வழிமுறைகளை வழங்குகிறது. இந்த இணையதள விண்ணப்பம் எளிமைப்படுத்தப்பட்ட சீன, மலாய், ஸ்பானிஷ் மற்றும் வியட்நாமிய மொழிகளிலும் கிடைக்கிறது. படம் 1 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி நான்கு படிகளை முடிப்பீர்கள்.

படம் 1. **உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான நான்கு படிகள்**

1. விண்ணப்பிக்கத் தொடங்கவும்
2. உங்களைப் பற்றி சொல்லவும்
3. தேவைப்படும் ஆவணங்களைப் பதிவேற்றவும்
4. விண்ணப்பத்தை உறுதிசெய்து சமர்ப்பிக்கவும்

## படி 1: விண்ணப்பிக்கத் தொடங்கவும்

A. [அவசரகால நிவாரண உதவி இணையதள போர்ட்டலைப்](#) பார்வையிடுங்கள் (ஆங்கிலம், மலாய், சீன மற்றும் வியட்நாமிய மொழிகளில் போர்ட்டல் கிடைக்கிறது)

B. **பதிவு** தாவலைக் கிளிக் செய்வதன் மூலம், Red Cross உடன் ஒரு கணக்கைப் பதிவுசெய்யவும்

*எண்கள், குறியீடுகள், சிறிய எழுத்து மற்றும் பெரிய எழுத்துக்கள் அடங்கிய குறைந்தது எட்டு எழுத்துக்கள் நீளமுள்ள கடவுச்சொல்லை நீங்கள் உருவாக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.*

C. வழங்கப்பட்ட தகவல்களை மதிப்பாய்வு செய்து, **அடுத்து** என்பதைக் கிளிக் செய்யவும்






## படி 2: உங்களைப் பற்றி சொல்லவும்

A. உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் படிவத்தில் உள்ளிடவும்


25%
முதல் பெயர்
வில்
கடைசி பெயர் *
ஸ்மித்
முதன்மை ஃபோன் எண் (லேண்ட்லைன் எனில், பகுதிக் குறியீட்டைச் சேர்க்கவும்)
0402160987
மின்னஞ்சல்
johntest@hotmail.com
பிறந்த தேதி (DD/MM/YYYY)
10/12/1967
மொழிபெயர்ப்பாளர் தேவை
ஆம்
பாலினம்
ஆண்
சொந்த மொழி
ஜெர்மன்
தெரு முகவரி
90 அல்பியன் தெரு
புறநகர்
பாக்ஸ் ஹில், மெல்போர்ன்
அஞ்சல் குறியீடு
3128
மாநிலம்
VIC

B. படிவத்தில் உங்கள் விசா தகவல் மற்றும் குடும்ப விவரங்களை உள்ளிடவும்


உங்கள் தகுதியை மதிப்பிடுவதற்கு விசா நிலையை நீங்கள் சரிபார்க்க வேண்டும்
விசா நிலை
பயண ஆவண வகை
ஆவண எண்
உங்கள் பயண ஆவணத்தின்படி நாட்டுரிமை
குடும்ப அமைப்பு
ஆஸ்திரேலியாவில் உங்களுடன் வசிக்கும் குடும்பத்தைப் பற்றி சிறப்பாக விவரிக்கும் விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவும்
இந்த விண்ணப்பத்தில் ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் விசா விவரங்களை உள்ளிடவும்
தொடர்புடையதைச் சேர்
முதல் பெயர் | கடைசி பெயர் | பிறந்த தேதி | நாட்டுரிமை | பயண ஆவண வகை | ஆவண எண்
காண்பிக்க பதிவுகள் எதுவும் இல்லை

C. படிவத்தில் உங்கள் விசா தகவல் மற்றும் குடும்ப விவரங்களை உள்ளிடவும்


உருவாக்கு

முதல் பெயர்*

கடைசி பெயர் *

பிறந்த தேதி

பயண ஆவண வகை

ஆவண எண்

நாட்டுரிமை

சமர்ப்பி

D. அவசரகால உணவு நிவாரணம் தேவைப்படுவதற்கான காரணங்களையும், எதற்கெல்லாம் நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டியதுள்ளது என்பதையும் டிக் செய்யவும்.


**உங்களுக்கு எதன் காரணமாக அவசரகால நிவாரண உதவி தேவைப்படுகிறது (பொருந்தும் அனைத்தையும் டிக் செய்யவும்)?**

- எனது வேலையை இழந்தேன்
- குடும்ப முறிவு
- வெளிநாடுகளில் உள்ள எனது குடும்பத்தினரால் எனக்கு உதவ முடியாது
- சேமித்தத் தொகை அனைத்தும் செலவாகியது
- பயன்பாட்டுக் கட்டணம் அதிகமானது
- எதிர்பாரா செலவுகள்
- மற்றவை

**உங்களுக்கு எதன் காரணமாக அவசரகால நிவாரண உதவி தேவைப்படுகிறது (பொருந்தும் அனைத்தையும் டிக் செய்யவும்)?**

- அடிப்படைத் தேவைகள்
- உணவு
- வாடகை
- மருத்துவச் செலவு
- ஆடைகள்
- மருந்துச் செலவு
- நீதிமன்றச் செலவு
- பள்ளி செலவுகள்
- போக்குவரத்து
- அபராதம
- குழநதைப பராமரபபுச செலவு
- மற்றவை

## படி 3: தேவைப்படும் ஆவணங்களைப் பதிவேற்றவும்

A. பின்வரும் உங்கள் வங்கி விவரங்களை உள்ளிடவும்:
- கணக்கு வைத்திருப்பவரின் பெயர்
- BSB எண்
- கணக்கு எண்

B. உங்கள் சமீபத்திய வங்கி அறிக்கையின் நகலை வழங்க **பதிவேற்று** என்பதைக் கிளிக் செய்யவும்

*இது இரண்டு வாரங்களுக்கு குறைவானதாகவும், மூன்று மாதங்களுக்கான பரிவர்த்தனைகளைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்*

C. உங்கள் விசாவின் நகலை வழங்க **பதிவேற்று** என்பதைக் கிளிக் செய்யவும்

D. அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றியதும், மேலும் தொடர **அடுத்து** என்பதைக் கிளிக் செய்யவும்






## படி 4: விண்ணப்பத்தை உறுதிசெய்து சமர்ப்பிக்கவும்

A. உறுதிமொழிப் படிவத்தை வாசிக்கவும்
B. உறுதிமொழியைப் புரிந்து, அதனை ஏற்றுக்கொண்டால், ஸ்கிரீனில் கீழே உள்ள கட்டத்தை டிக் செய்யவும்
C. **சமர்ப்பி** என்பதைக் கிளிக் செய்து படிவத்தை நிறைவு செய்யவும்.

**நீங்கள் இப்போது உங்கள் விண்ணப்பத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டீர்கள்.**




# அடுத்தது என்ன?

- Red Cross உங்களுடைய விண்ணப்பம் முழுமையானது மற்றும் சரியானது என்பதைச் சரிபார்க்கும், மேலும் தகவல் தேவைப்பட்டால் உங்களைத் தொடர்பு கொள்ளும்.
- நீங்கள் தகுதியற்றவராக இருந்தால், Red Cross உங்களுக்கு 5 வேலை நாட்களுக்குள்ளாக மின்னஞ்சல் அனுப்பித் தெரியப்படுத்தும்.
- நீங்கள் தகுதியுள்ளவராக இருந்தால், Red Cross உங்களுக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பி, 5 வேலை நாட்களுக்குள்ளாக, நீங்கள் பரிந்துரைத்த வங்கிக் கணக்கில் நேரடியாகப் பணம் செலுத்தும்.

**கூடுதல் தகவலுக்கு, சமூக நலத்துறையின் இணையதளத்திற்குச் சென்று,** [பேரிடர் கால நிவாரண உதவி திட்டத்தின் முகப்புறையைப்](#) **பார்வையிடவும்.**